**28.08.2019 அ.வ.எண். 148/2008 வா.த.சா. 2 குமார்**

**குறுக்கு விசாரணை**

நான் படிக்கவில்லை. எனக்கு எழுதபடிக்க தெரியாது. கையெழுத்து போடுவேன். இந்த வழக்கு சம்மந்தமாக சில விவரங்கள் எனக்கு தெரியும். முழு விவரங்கள் எனக்கு தெரியாது. வாதி எனது மனைவி ஆவார். தாவா சொத்து என்ன வகையான நிலம் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் ச.எண். 388 ஆகும். அதன் விஸ்தீரணம் 4-1/2 செண்ட் ஆகும். அதன் குறிப்பான நீளம் மற்றும் அகலம் எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்மந்தமான பட்டா, சிட்டா மற்றும் அடங்கல் ஆகியவை உள்ளன. வருவாய் துறை ஆவணங்களில் தாவா சொத்து புஞ்சை நிலமாக இருந்து வருகிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா பிராதில் தாவா சொத்து புஞ்சை நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண். 388/8 ஆகும். தாவா சொத்தின் பட்டா வாதியின் பெயரில் இருந்து வருகிறது. நகராட்சி மூலமாக வட்டாட்சியரால் எனது மனைவி பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. எனது மனைவிக்கு எதிராக சதீஷ் என்பவர் இந்நீதிமன்றத்தில் அ.வ.எண். 203/2008 தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். எனது பெயர் குமார் எனது தகப்பனார் பெயர் முருகன் என்றும், எனது தகப்பனாரின் தகப்பனார் பெயர் கண்ணன் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தை ஆதியில் எனது தாத்தா வா.சா.ஆ1 ல் உள்ள கிரைய பத்திரத்தின் மூலமாக கிரையம் பெற்றார் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ1ல் சொத்து விவரத்தில் சர்க்கார் புஞ்சை ச.எண். 388/8ன் முழு விஸ்தீரணம் 56 செண்ட் நிலம் என்றும், கிரையம் பெற்ற சொத்தின் கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு அளவுகள் குறிப்பிடப்பட்டும், ஜக்குபந்தி விவரங்க்ள குறிப்பிடப்பட்டும் 4-1/2 செண்ட் நிலம் கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் 1974ம் வருடம் பிறந்தேன். குறிப்பாக எனது தாத்தா எந்த வருடத்தில் இறந்துபோனார் என்று எனக்கு நினைவில்லை. எனது தாத்தா இறந்த சமயத்தில் எனக்கு வயது சுமார் 12 இருந்து இருக்கும். சொத்தை சுயமாக கிரையம் பெறும் நபர் இந்த சொத்தை அவர் விரும்பும் நபருக்கு கிரையம் கொடுக்கலாம் என்று சொன்னால் சரிதான். 1983 அன்று எனது தாத்தா கிரையம் பெற்ற மேற்சொன்ன சொத்தை சங்கரன் என்பவருக்கு கிரைய பத்திரம் மூலம் கிரையம் செய்துகொடுத்ததார் என்றும், அந்த கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. பின்பு 26.08.1999 அன்று மேற்சொன்ன சங்கரன் என்பவர் 2ம் பிரதிவாதி மாயாவதி என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றும், அந்த கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. வந்தவாசி கோட்டை காலனியை சேர்ந்த நாராயணன் மகன் சங்கரன் என்பவரை எனக்கு தெரியும். வா.சா.ஆ3ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலப்பதிவேட்டு நகலில் குறிப்பாக தாவா சொத்து எந்த வகையான நிலம் என்ற குறிப்புகள் இல்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து அமைந்துள்ள இடத்தின் அருகே எனது தாத்தா கண்ணனுக்கு சொந்தமான வேறு சொத்துக்கள் ஏதும் இல்லை. 09.09.2004 அன்று மேற்சொன்ன 2ம் பிரதிவாதி மாயாவதி 3ம் பிரதிவாதி சதீஷ் என்பவர்கள் தாவா சொத்து சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட தான

செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிகொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து இந்நாள் வரை 3ம் பிரதிவாதி சதீஷ் அனுபவத்தில் இருந்துவருகிறது என்று சொன்னால் சரியல்ல. எனது அனுபவத்தில் தான் இருந்து வருகிறது. தாவா சொத்து அமைந்திருக்கும் நிலம் புஞ்சை நிலம் என்றும், அது சம்மந்தமாக வருவாய் துறையினரால் 3ம் பிரதிவாதியின் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், அந்த பட்டா சம்மந்தமான சிட்டா நகலை வாதி சதீஷ் தாக்கல் செய்துள்ள வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் அருகே இறந்து போன 1ம் பிரதிவாதி முருகன் என்பவருக்கு பாத்தியப்பட்ட நிலம் அமைந்துள்ளது என்றும், அந்த நிலத்தில் 1ம் பிரதிவாதி முருகன் என்பவரின் மகள் 4ம் பிரதிவாதி சத்யா என்பவர் குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து மற்றும் 1ம் பிரதிவாதி முருகன் என்பவர் கிரையம் பெற்ற சொத்தையும் சேர்த்து ச.எண். 388/8பி-ல் உட்பிரிவு செய்யப்பட்டு அந்த சர்வே எண்ணில் உள்ள நிலம் 3ம் பிரதிவாதி சதீஷ் என்பவர் பெயரில் வருவாய் துறை ஆவணத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொதததை எனது தாத்தா கண்ணன் என்பவர் சங்கரன் என்பவருக்க கிரையம் கொடுத்ததால் எனக்கும் எனது தகப்பனாருக்கும் எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எவ்வித உரிமையும், அனுபவமும் இல்லாமல் தாவா சொத்தை நான் எனது மனைவியின் பெயருக்கு தான செட்டில்மெண்ட எழுதி கொடுத்துள்ளேன் என்றும் அந்த தான செட்டில்மெண்ட் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. எனத தாத்தா பெயரில் இருந்த மூல பத்திரத்தின் அடிப்படையில் தாவா சொத்து எனக்கு பாத்தியபட்டிருந்தது. அதன் பேரில் எனது மனைவிக்கு தான செட்டில்மெண்ட் எழுதிகொடுத்தேன். குறிப்பாக எனது பெயரில் தாவா சொத்து சம்மந்தமாக பத்திரம் ஏதும் இல்லை. எனது தாத்தா இறப்பிற்கு முன்னதாகவே எனது தகப்பனார் இறந்து போய்விட்டார். எனது தாத்தா கண்ணன் எனது தகப்பனார் பெயரிலும், எனது பெயரிலும் தாவா ொசத்து சம்மந்தமாக பத்திரம் ஏதும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் நகராட்சியில் பணி செய்துவந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தா மட்டுமே நகராட்சியில் பணி செய்தார். நானும் நகராட்சியில் பணி செய்யவில்லை. எனது வீட்டின் அருகே நகராட்சியில் பணி செய்யும் நபர்கள் பணி செய்துவருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். எந்த ஆவணத்தின் அடிப்படையில் நகராட்சியால் நில அளவை பதிவேட்டில் எனது மனைவியின் பெயர் சேர்க்கப்பட்டது என்ற கேட்டால் நான் எனது மனைவிக்கு எழுதிகொடுத்த தான செட்டில்மெண்ட் அடிப்படையில் அவ்வாறு அவர் பெயர் சேர்க்கப்பட்டது. தாவா செட்டில்மெண்ட் பத்திரத்தை தவிர வேறு ஆவணங்கள் ஏதும் நகராட்சியில் சமர்பிக்கப்பட்டதா என்று கேட்டால் இல்லை. எனது மனைவியின் பெயர் சேர்க்கப்பட்தற்கு முன்பாக நகராட்சியால் அளவீடு செய்யப்பட்டது. நகராட்சி மூலமாக அளவையர் வந்து நிலத்தை அளந்தார். நகராட்சியில் எனது மனைவியின் பெயர் சேர்க்கபடுவதற்கு மனு செய்த சமயத்தில் தாவா சொத்து சம்மந்தமாக வில்லங்கம் ஏதும் உள்ளதா என்று தெரிவித்தோமா என்றால் இல்லை. எனது கிரையம் பெற்ற தேதியிலிருந்து வில்லங்க சான்றிதழ் பெற்று நகராட்சியில் சமர்பித்து எனது மனைவியில் பெயர் சேர்க்கபட்டது. குறிப்பாக 1960 முதல் 2005ம் வருடம் வரை வில்லங்க சான்றிதழ் பெற்று சமர்ப்பித்தோம். நாங்கள் வில்லங்க சான்றிதழ் பெற்ற சம்யத்தில எனது தாத்தாவிடமிருந்து சங்கரன் என்பவர் கிரையம்

பெற்து குறித்தும் சங்கரன் என்பவரிடமிருந்து 2ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதி கொடுத்த தான செட்டில்மெண்ட பத்திரம் பற்றியும் குறிப்பிடப்படவில்லை. நகராட்சியில் நாங்கள் விணணப்பித்த சமயத்தில் வருவாய் துறையிலிருந்த பட்டா, சிட்டா அடங்கல் ஆவணங்களை பெற்று சமர்ப்பித்தேன். தாவா சொத்து சம்மந்தமாக நாங்கள் பெற்ற வில்லங்க சான்றிதழை இந்நீதிமன்றத்தில் எங்களால் தாக்கல் செய்யமுடியும்.

**குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.**